IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.V

(Chapter XXIII Code of Criminal Procedure)

TIRUNELVELI.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 2239/2022 |
| Deposition Of Witness for | : | PW 1 |
| Name | : | சுடலைமுத்து |
| Father's/Husband's Name | : | செல்லையா |
| Village | : | மேலச்செவல் |
| Calling | : | -- |
| Age | : | -- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, this **05.03.2026**

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேலச்செவலில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கைரேகைகள் எதுவும் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சாட்சிக்கு வயது அதிகமாகிவிட்டதால் அவர் மகன் தங்கபாண்டியின் உதவியுடன் சாட்சியம் அளித்தார். இருவரின் ஆதார் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது.

**(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதன்**

RANI K Digitally signed by RANI K Date: 2026.03.05 16:22:54 +0530

**பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 24.06.2011ம் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு நானும், எனது மருமகள் ஜெயமணியும் வீட்டில் இருந்தபோது, பக்கத்து வீட்டு ஜான்சன் முத்தையா என்பவர் பழைய முன்விரோதத்தை மனதில் கொண்டு அவரும், அவரது மனைவியும் நான்அனுபவம் செய்து வரும் இடத்திற்கும் அத்துமீறி நுழைந்து மாட்டுத தொழுவத்தில் பனஉறையை பிடித்து இழுத்தார் என்றும், இதனால் தொழு வலம் இழந்து விழுந்துவிட்டது என்றும், இதை நான் தடுத்தபோது, என்னை எதிரிகள் அசிங்கமாக பேசி, கிட்டே வந்தால் நெஞ்சை கிழித்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், மறுநாள் காலை 25.06.2011ம் தேதி முன்னீர்பள்ளம் காவல் நிலையம் வந்து எதிரிகளின் மீது மேற்படி செயல்களுக்கு நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன் என்றும் அந்த புகார் மனுவில் சேதமதிப்பு ரூ.50,000/–வரை இருக்கலாம் என தவறுதலாக கொடுத்துவிட்டேன் என்றும், பின்பு காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காததால் திருநெல்வேலி, நடுவர் நீதிமன்றம் எண்.5 ல் மனுதாக்கல் செய்து, வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டதின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டதால், அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

RANI K Digitally signed by RANI K Date: 2026.03.05 16:22:59 +0530